**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 22 November 2016

# ‘ஹோட்டல் 81’ தொழிலதிபரின் $2 மில்லியன் நன்கொடை

‘ஹோட்டல் 81’ எனும் மலிவுக் கட்டண ஹோட்டல் குழுமத்தின் நிர்வாகத் தலைவரான திரு சூ சொங் ஙென் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்திற்கு 2 மில்லியன் வெள்ளி நன்கொடை அளித்துள்ளார். இந்த நன்கொடைத் தொகை நிதி உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு கல்வி உதவி நிதியாக வழங்கப்படும். ‘ஹோட்டல் 81 சூ சொங் ஙென் கல்வி உதவி நிதி’ என்று அழைக்கப்படும் இந்த நிதிக்கு 2017/2018 கல்வியாண்டில் பயிலும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

“நான் சிறுவயதில், நிதிப் பிரச்சினை காரணமாக என் கல்விப் பயணத்தைத் தொடர முடியவில்லை. இந்த நிலை அடுத்தவருக்கு ஏற்படக்கூடாது,” என்று திரு சூ சொன்னார்.

தங்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகையால் தங்கள் வாழ்க்கை எவ்வாறு மாற்றமடைந்தது என்று மாணவர்கள் தம்மிடம் தெரிவித்ததாக பல்கலையின் தலைவர் பேராசிரியர் டான் சோர் சுவான் கூறினார். திரு சூ அளித்த நன்கொடைக்கு நன்றி தெரிவித்த பேராசிரியர் டான், இளம் தலைமுறையினருக்கு உதவ இந்த நன்கொடை, சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கும் மற்ற வர்த்தகத் தலைவர்களுக்கும் உந்துதலாக இருக்கும் என்று நம்புவதாகக் கூறினார்.

ஏற்கெனவே, கடந்தாண்டு திரு சூ சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் நிதி உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு $2 மில்லியனை நன்கொடையாக வழங்கினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.